நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,
நாள்.20.10.2023.

**<u>மன்றக்கூட்ட அறிவிப்பு</u>**

2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் நாள்.26.10.2023, வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்றக் கூடத்தில் வைத்து நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

நகர்மன்ற தலைவர்,
புளியங்குடி நகராட்சி

**<u>சாதாரண கூட்டம்</u>**

<table>
<tr><th>Date of Council</th><th>Decision No.</th><th>Subject in Agenda</th><th>Decision of Council</th></tr>
<tr><td></td><td>358</td><td>பொருள்.1<br>புளியங்குடி நகராட்சி பகுதியில் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தனுஷ்M.குமார் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சித் திட்டம் 2022-23 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தென்காசி அவர்களின் கடித ந.க.எண்.அ3/2797/2022, நாள்.01.12.2022-ன்படி மதிப்பீடு தயார் செய்து வழங்க கேட்டு கடிதம் வரப்பெற்றதற்கிணங்க, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2238/2021/இ1, நாள்.24.08.2023-ன்படி மதிப்பீடு தயார் செய்து அனுப்பப்பட்டது. அதனடிப்படையில் தென்காசி மாவட்ட ஆட்சித்லைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை கடித ந.க.எண்.COLRD/1792/2023-A3, நாள்.11.09.2023-ன்படி 29.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2238/2021/இ1)
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>புளியங்குடி நகராட்சி 7வது வார்டு வடக்கு ரதவீதி சந்திப்பில் 9 மீட்டர் மினி உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல்</td><td>3.30</td></tr>
<tr><td>2</td><td>புளியங்குடி நகராட்சி 10வது வார்டு அருணாசல விநாயகர் கோவில் தெருவில் 9 மீட்டர் மினி உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல்</td><td>3.30</td></tr>
<tr><td>3</td><td>புளியங்குடி நகராட்சி 11வது வார்டு இந்திரா நகரில் 9 மீட்டர் மினி உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல்</td><td>3.30</td></tr>
<tr><td>4</td><td>புளியங்குடி நகராட்சி 30வது</td><td>3.30</td></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>வார்டு அரசு மருத்துவமனை அருகில் 9 மீட்டர் மினி உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல்</td><td></td></tr>
<tr><td>5</td><td>புளியங்குடி நகராட்சி 1வது வார்டு மேலரதவீதி, வடக்கு ரதவீதி சந்திப்பில் 9 மீட்டர் மினி உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல்</td><td>3.30</td></tr>
<tr><td>6</td><td>புளியங்குடி நகராட்சி 18வது வார்டு கருப்பழகு நடுத்தெருவில் 9 மீட்டர் மினி உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல்</td><td>3.30</td></tr>
<tr><td>7</td><td>புளியங்குடி நகராட்சி 23வது வார்டில் 32வது வார்டு சந்திப்பில் 9 மீட்டர் மினி உயர் கோபுர மின்விளக்கு (LED) அமைத்தல்</td><td>3.30</td></tr>
<tr><td>8</td><td>புளியங்குடி நகராட்சி 14வது வார்டு காயிதேமில்லத் மேல்நிலைப்பள்ளி அருகில் 9 மீட்டர் மினி உயர்கோபுர மின்விளக்கு (LED) அமைத்தல்</td><td>3.30</td></tr>
<tr><td>9</td><td>புளியங்குடி நகராட்சி காந்தி பஜார் பகுதியில் 9 மீட்டர் மினி உயர் கோபுர மின்விளக்கு (LED) அமைத்தல்</td><td>3.30</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>29.70</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>359</td>
<td>பொருள்.2<br>புளியங்குடி நகராட்சி பகுதிகளில் Dormant Fund Account and Interest Fund (DAF) 2023–2024 ஆம் ஆண்டிற்கு சாலைபணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.U.O.Note No.27062/2022/SS3, நாள்.14.06.2023 கடிதத்தின்படி நிர்வாக அனுமதியும், திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.608/2023/ஆ1, நாள்.21.06.2023–ன் செயல்முறையின்படி தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1267/2023/இ1)<br>அலுவலக குறிப்பு : மன்றம் அங்கீகரிக்கலாம்</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>360</td>
<td></td>
<td>
பொருள்.3<br>
புளியங்குடி நகராட்சி பகுதிகளில் Dormant Fund Account 2023–24 ஆம் ஆண்டின் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ள 12.07.2023–ல் வரப்பெற்றுள்ள கீழ்க்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
மதிப்பீட்டுத் தொகை ரூ.67.00 இலட்சம்
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பா.அந்தோணி, வெள்ளக்கவுண்டன்பட்டி.</td><td>0.01 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.N.ரவிச்சந்திரன், கடையநல்லூர்</td><td>7.59 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையினை விட 0.01 சதவீதம் குறைவாக வழங்கியுள்ள திரு.பா.அந்தோணி, வெள்ளக்கவுண்டன்பட்டி என்ற ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம். (ந.க.எண்.1267/2023/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>361</td>
<td></td>
<td>
பொருள்.4<br>
புளியங்குடி நகராட்சி பகுதியில் 15வது நிதிக்குழு மான்யம் 2022–23 (Tied grant) –ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு BOV வாகனங்களை கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18277/2022/CFC–1, நாள்.21.03.2023–ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.0731/2023/இ1)
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு தொகை இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான BOV வாகனங்களை விநியோகம் செய்தல் பணி (3 எண்ணம்)</td><td>6.00</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table><tr><td></td><td>மொத்தம்</td><td>6.00</td></tr></table>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td></td><td>362</td><td>
பொருள்.5<br>
புளியங்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான BOV வாகனங்களை விநியோகம் செய்தல் பணியினை (3 எண்ணம்) 15வது நிதிக்குழு மான்யம் 2022-23 (Tied grant)-ன் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18277/2022/CFC-1, நாள்.21.03.2023-ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் 18.04.2023-ல் வரப்பெற்றுள்ள கீழ்க்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சம்
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>ஆர்த்தி ஜியோ டெக், நாமக்கல்</td><td>மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>ராயல் அண்ணன்மார், கரிச்சிபாளையம், நாமக்கல்</td><td>மதிப்பீட்டு தொகைக்குள்</td></tr>
</table>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையினை விட 0.04 சதவீதம் குறைவாக வழங்கியுள்ள ராயல் அண்ணன்மார், கரிச்சிபாளையம், நாமக்கல் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம். (ந.க.எண்.0731/2023/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>363</td><td>
பொருள்.6<br>
புளியங்குடி நகராட்சி பொதுநிதி - 2023-2024 - இந்நகராட்சிக்குட்பட்ட மடத்து தெருவில் உள்ள சமுதாய கூடத்தில் அலுமினிய தடுப்பு பார்டிசியன், குடிநீர் வசதி மற்றும் மின்சார
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வசதி ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு 02.08.2023–ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.3.10 இலட்சம்<br><table><tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்தகாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr><tr><td>1</td><td>திரு.சு.ராமர்பாண்டியன், புளியங்குடி</td><td>0.13 சதவீதம் குறைவு</td></tr><tr><td>2</td><td>திரு.கி.சுந்தரபாண்டியன், புளியங்குடி</td><td>0.31 சதவீதம் அதிகம்</td></tr></table><br>மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையினை விட 0.13 சதவீதம் குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தகாரர் திரு.சு.ராமர்பாண்டியன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம். (ந.க.எண்.1028/2023/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 364 | **பொருள்.7**<br>புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட கற்பக வீதி தெருவில் நகராட்சி அரசுப்பள்ளியில் கூடுதல் பணிகளாக டைல்ஸ், வயரிங், பிரிக் ஒர்க், பெயிண்டிங் போன்ற பணிகளை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு 31.08.2023–ல் வரப்பெற்ற கீழ்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.7,00,000/–<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தகாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr><tr><td>1</td><td>திரு.கா.முனியாண்டி, புளியங்குடி</td><td>0.12 சதவீதம் குறைவு</td></tr><tr><td>2</td><td>திரு.சா.திருமலைச்சாமி, புளியங்குடி</td><td>0.37 சதவீதம் அதிகம்</td></tr></table><br>மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையினை விட 0.12 சதவீதம் குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தகாரர் | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>திரு.கா.முனியாண்டி என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம். (ந.க.எண்.1519/2023/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>365</td><td>பொருள்.8<br>புளியங்குடி நகராட்சி – பொதுநிதி – இந்நகராட்சிக்குட்பட்ட FSTP கழிவுநீர் கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது புதிதாக அமைக்கப்பட்ட அந்நிலையத்தை Operation & Maintenance இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள 31.08.2023–ல் வரப்பெற்ற கீழ்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>மதிப்பீட்டுத் தொகை ரூ.12,20,000/–<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தகாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.இ.அரசக்கனி, சங்கரன்கோவில்</td><td>0.03 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>செந்தூர் லைட்ஸ், கடையநல்லூர்</td><td>1.06 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையினை விட 0.03 சதவீதம் குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தகாரர் திரு.இ.அரசக்கனி, சங்கரன்கோவில் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம். (ந.க.எண்.1629/2018/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>366</td><td>பொருள்.9<br>புளியங்குடி நகராட்சி, வார்டு 1, ஆவணியம்மன் கோவில் தெருவில் தேசிய பொது சுகாதார மையம் அமைக்கும் பணி குறித்தான விளம்பரத்தை தினகரன் நாளிதழில் வெளியிட்டமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ.14288/–, பட்டியல் எண்.3300403725, நாள்.12.02.2023–ன்படி KAL Publication (P) Ltd, Tirunelveli நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | எனவே தொகை ரூ.14,288/-யை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1645/2022/இ1) | |
| | 367 | **பொருள்.10**<br>புளியங்குடி நகராட்சி – சட்டமன்ற அறிவிப்பு எண்.2023-24-ன்படி 15வது நிதிக்குழு மான்யம் 2023-24 (Untied grant) திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 3, சிந்தாமணி பகுதியில் உள்ள தகன எரிமேடையினை நவீன எரிவாயு தகனமேடையாக மாற்றம் செய்யும் பணி குறித்தான விளம்பரத்தை தினகரன் நாளிதழில் வெளியிட்டமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ.10,206/-, பட்டியல் எண்.3300428413, நாள்.25.06.2023-ன்படி KAL Publication (P) Ltd, Tirunelveli நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. எனவே தொகை ரூ.10,206/-யை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.746/2023/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| | 368 | **பொருள்.11**<br>புளியங்குடி நகராட்சி பகுதிகளில் 2021-2022 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளுக்கான திட்டப்பணிகள் குறித்தான விளம்பரங்களை தினகரன், தமிழ்முரசு, தினத்தந்தி, மாலைமலர், தினமலர் ஆகிய நாளிதழ்களில் வெளியிடுவதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ.2,01,456/-க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1645/2022/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| | 369 | **பொருள்.12**<br>புளியங்குடி நகராட்சி அலுவலகத்தில் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் அதனை சார்ந்த உதிரிபாகங்களின் சீரான இயக்கத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் (AMC) மேற்கொள்ள ஆகும் தொகை ரூ.1.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1801/2023/இ1)<br>**அலுவலக குறிப்பு** : | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 370 | **பொருள்.13**<br>இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த திரு.மா.முருகன் என்பவர் 30.06.2023 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்று விட்டார். மேலும் அன்னார் 04.07.1987 முதல் 30.06.2023 வரை பணியாற்றிய காலத்தில் 31.03.2018 வரை ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதித்தொகை, அதற்குரிய வட்டித் தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகையினை வழங்க அரசாணை (ஓய்வூதியம்) M.S.எண்.42, நாள்.15.09.2000–ன்படி வழங்க வேண்டி அன்னார் விண்ணப்பம் செய்துள்ளார். அதன் பிரகாரம் கணக்கிடப்பட்டதில் சிறப்பு சேம நலநிதித் தொகை ரூ.2,960/– மேலும் கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகை ரூ.4,420/– அதற்குரிய வட்டித் தொகை ரூ.10,189/– மற்றும் அரசு பங்குத் தொகை ரூ.10,000/– ஆக மொத்தம் ரூ.27,569/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 371 | **பொருள்.14**<br>புளியங்குடி நகராட்சி வார்டு எண்.16, காயிதேமில்லத் முகம்மது இஸ்மாயில் தெருவில் நூருல் இஸ்லாம் அரபி பாடசாலை இயங்கி வருகிறது. மேற்படி பாடசாலைக்கு சொத்துவரி விலக்கு அளிக்கப்பட்ட கட்டிடம் என சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1594/2023/அ1)<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 372 | **பொருள்.15**<br>புளியங்குடி நகராட்சி வார்டு எண்.7, சங்கரன்கோவில் ரோட்டில் அருள்மிகு ஸ்ரீதூண்டில் மாடசாமி திருக்கோவில் அமைந்துள்ளது. மேற்படி கட்டிடம் வழிபாட்டு தலமாக உள்ளதால், சொத்துவரி விலக்களிக்கப்பட்ட கட்டிடம் என சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1691/2023/அ1)<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 373 | **பொருள்.16**<br>புளியங்குடி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புளியங்குடி பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.3, 13, 14 மற்றும் 31– ஆகிய கடைகளை பழைய குத்தகைதாரர்களால் கடை நடத்த முடியாமல் அலுவலகத்தில் திரும்ப ஒப்படைத்து விட்டார்கள். எனவே மேற்படி கடைகளை ஏலம் / ஒப்பந்தப்புள்ளியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு** :<br>அவசரம், அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின்<br>முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி க்கலாம். (ந.க.எண்.1711/2023/அ1) | |
| | 374 | **பொருள்.17**<br>தென்காசி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.COLR/4578/2023-J2., நாள்.20.07.2023ன்படி சிந்தாமணி கிராமம், புல எண்.999/3, நத்தம் புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் 28.08.5 ஹெக்டேர் நிலத்தில் 0.04.00 ஏர்ஸ் நிலத்தில் புளியங்குடி நகராட்சி மூலம் சுகாதார வளாகம் அமைக்க 2002-ம் ஆண்டு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி நிலத்திற்கு நில மதிப்பு தொகை ரூ.1,76,848/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தி ஆறாயிரத்தி என்னூற்றி நாற்பத்தி எட்டு மட்டும்) நகராட்சியால் அரசுக்கணக்கில் செலுத்தப்படாமல் உள்ளது. தற்போது நகராட்சி வார்டு-D, பிளாக்-11, நகரளவை எண்.64/1 சர்க்கார் புறம்போக்கு என நகரளவை ஆவணங்களில் பதிவாகியுள்ள இடத்தில் அறிவு சார் மையக்கட்டிடம் கட்டுவதற்கு மேற்படி இடத்திற்கு அனுமதி மற்றும் நில மாற்றம் செய்து தரும்படி இவ்வலுவலக கடிதம் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி அவர்களுக்கு அனுப்பப்பட்டதில், மாவட்ட வருவாய் அலுவலர், தென்காசி அவர்களின் கடிதத்தில் கடையநல்லூர் வட்டம், சிந்தாமணி கிராமம் புல எண்.999/3 நத்தம் புறம் போக்கு மொத்தம் விஸ்தீரணம் 28.8.5 ஹெக்டேர் நிலத்தில் 0.04.0 ஏர்ஸ் நிலத்தில் புளியங்குடி நகராட்சியின் மூலம் சுகாதார வளாகம் அமைக்க 2002 ஆம் ஆண்டு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டு 2004-2005 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வரும் இடத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய ஏதுவாக அதற்குரிய நிலமதிப்பு தொகை ரூ.1,76,848/- செலுத்தப்படாமல் உள்ளது மேற்படி தொகையினை அரசுக்கணக்கில் செலுத்திய பின்னரே அறிவு சார் மையம் கட்டிடம் அமைத்திடும் வகைக்கு நிலம் ஒதுக்கீடு செய்து தர இயலும் என தெரிவித்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.1,76,848/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தி ஆறாயிரத்தி என்னூற்றி நாற்பத்தி எட்டு மட்டும்) அரசு கணக்கில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 375 | **பொருள்.18**<br>புளியங்குடி நகராட்சி - இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள Xerox Machine பழுதடைந்துள்ள காரணத்தால் 30.05.2023 மற்றும் 02.08.2023-க்கான மன்றக் கூட்டப்பொருள் தொடர்பான அஜெண்டாவை Xerox எடுத்து அனைத்து நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பட்ட செலவினத் தொகை ரூ.4360/-யை அருண் பொது சேவை மையம், புளியங்குடி நிறுவனத்திற்கு மன்ற | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதி பெற்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 376 | **பொருள்.19**<br>புளியங்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட சிந்தாமணி கிராமம், மேலரதவீதியில் வசித்து வந்த திரு.பார்த்திபன் என்பவர் இந்திய இராணுவத்தில் பணிபுரிந்த போது தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட சண்டையில் இந்திய தேசத்திற்கு தனது இன்னுயிரை தியாகம் செய்துள்ளார். அன்னாரின் வீரத்தினை பாராட்டி கௌரவிக்கும் வகையில் இந்திய ஜனாதிபதி அவர்களால் 26.01.2007 அன்று இந்திய அரசின் உயரிய விருதான "கீர்த்தி சக்ரா" வழங்கப்பட்டுள்ளது. சிந்தாமணி கிராமம், நகர்மன்ற வார்டு எண்.3, 4, 5 & 7 ஆகியவற்றில் அமைந்துள்ள மேலரதவீதியை பெயர் மாற்றம் செய்து "லெப்டின்ன்ட் பார்த்திபன் தெரு" என பெயர் சூட்டுவது குறித்து தீர்மானத்தை இந்நகராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31961/2022/டிபி1, நாள்.24.03.2023–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகர்மன்றத் தீர்மான எண்.317, நாள்.30.05.2023–ன்படி அனுமதி பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.2105/2014/எப்1, நாள்.01.06.2023–ல் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31961/2022/டிபி1, நாள்.09.08.2023–ன்படி "லெப்டினன்ட் பார்த்திபன் தெரு" என்பதற்கு பதிலாக "துணை நிலை படைத்தலைவர் பார்த்திபன் தெரு" என மாற்றம் செய்து, திருத்திய நகர்மன்றத் தீர்மானத்தை மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே சிந்தாமணி கிராமம், மேலரதவீதியை பெயர் மாற்றம் செய்து "துணை நிலை படைத்தலைவர் பார்த்திபன் தெரு" என பெயர் சூட்ட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்ட து |
| | 377 | **பொருள்.20**<br>28வது வார்டு மெயின் ரோட்டில் அமைந்துள்ள Sintex Tank (LIC Office) அருகில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அதனை அகற்றுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு **:** மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்ட து |

378

**பொருள்.21**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்கள் மற்றும் ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு சுமார் 20 வருடங்களுக்கு மேலாகியுள்ள மகேந்திரா & மகேந்திரா ஈப்பு வாகனம் (LMV Jeep) எண்.TN–72–W–2714 கழிவு செய்து 09.10.2023 அன்று ஏலமிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>மகேந்திரா & மகேந்திரா ஈப்பு வாகனம் (LMV Jeep) எண்.TN–72–W–2714</u>**

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மு.பால்பாண்டியன், த/பெ.முத்தையாதேவர், 131பி, அம்மன் கோவில் வடக்கு தெரு, தெற்கு பனைவடலிசத்திரம் | 33300 | – |
| 2 | மு.முத்துக்குமார், த/பெ.முத்துச்சாமி, 143, பொம்மம்மாள் கோவில் தெரு, திருமலாபுரம் | 33500 | – |
| 3 | M.சாமிகாளை, 5/41, வலையப்பட்டி, P.சாலிப்பட்டி அஞ்சல், ஸ்ரீவில்லிபுத்தூர். | 33400 | – |
| 4 | M.சேக்அப்துல்காதர், 3C, மகாராஜா பிள்ளை தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி | ஏலக்கேள்வி இல்லை | – |
| 5 | K.பீர்முகைதீன், 31/6A, K.C.நயினார் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி | ஏலக்கேள்வி இல்லை | – |
| 6 | ச.சோலையப்பன், த/பெ.சண்முகம், 73, துவரை ஆபிஸ் கைலாசபுரம் தெற்கு தெரு, திருநெல்வேலி | ஏலக்கேள்வி இல்லை | – |
| 7 | பொ.பரமசிவன், த/பெ.பொன்னுசாமி, 2/1, வடக்கு தெரு, சிந்துப்பூந்துறை, திருநெல்வேலி | ஏலக்கேள்வி இல்லை | – |
| 8 | ரா.முருகன், த/பெ.ராமசாமி, துவரை ஆபிஸ் கைலாசபுரம் தெற்கு | ஏலக்கேள்வி இல்லை | – |

அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>தெரு, திருநெல்வேலி</td><td></td><td></td></tr>
<tr><td>9</td><td>வீ.மருதுபாண்டி,<br>த/பெ.வீரபாண்டி,<br>151எ, துவரை ஆபிஸ்<br>கைலாசபுரம் தெற்கு<br>தெரு, திருநெல்வேலி<br>ஜங்ஷன்</td><td>ஏலக்கே<br>ள்வி<br>இல்<br>லை</td><td>–</td></tr>
<tr><td>10</td><td>சோ.மாணிக்கம்,<br>த/பெ.சோலையப்பன்,<br>72, துவரை ஆபிஸ்<br>கைலாசபுரம் தெற்கு<br>தெரு, திருநெல்வேலி</td><td>ஏலக்கே<br>ள்வி<br>இல்<br>லை</td><td>–</td></tr>
</table>
பொருளில் கண்ட இனத்திற்கு வரப்பெற்ற ஏலத்தொகையில் வரிசை எண்.2–ல் உள்ள திரு.முத்துக்குமார், திருமலாபுரம் என்பவர் உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ.33500/–யை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3327/2018/இ2)<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>379</td>
<td>
பொருள்.22<br>
புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், துணை இயக்குநர், சுகாதார பணிகள், தென்காசி மாவட்டம் அவர்களின் அறிவுரையின்படியும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மற்றும் தூய்மை பணிகள் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகளுக்கு பூச்சிக்கொல்லி மருந்துகள், கிருமி நாசினி மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு கையுறைகள் கீழ்க்கண்ட விபரப்படி தேவைப்படுகிறது.
<table>
<tr><td>1</td><td>பைரித்திரம் 2% Extract</td><td>:</td><td>200 லிட்டர்</td></tr>
<tr><td>2</td><td>டெமிபாஸ் 50% Extract</td><td>:</td><td>200 லிட்டர்</td></tr>
<tr><td>3</td><td>பாசில்லஸ் துரிஞ்சியென்சிஸ்</td><td>:</td><td>100 லிட்டர்</td></tr>
<tr><td>4</td><td>பிளீச்சிங் பவுடர்</td><td>:</td><td>2000 கிலோ</td></tr>
<tr><td>5</td><td>கருப்பு பினாயில்</td><td>:</td><td>200 லிட்டர்</td></tr>
<tr><td>6</td><td>ரப்பர் கையுறை</td><td>:</td><td>300 ஜோடி</td></tr>
<tr><td>7</td><td>காட்டன் கையுறை</td><td>:</td><td>300 ஜோடி</td></tr>
</table>
மேற்கண்ட பொருட்கள் வாங்குவதற்கான உத்தேச செலவினத் தொகை 18% GST சேர்த்து ரூ.8,04,000/–க்கு (ரூபாய் எட்டு இலட்சத்து நான்காயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td>அனுமதிக்கப்பட்ட<br>து</td>
</tr>
<tr>
<td></td>
<td>380</td>
<td>
பொருள்.23<br>
புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட நடுக்கருப்பழகு தெருவில் 15வது நிதிக்குழு 2022–23 (Untied grant) திட்டத்தின் கீழ் சாலையை புதுப்பிக்கும் பணிக்கு ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பார்வையில் கண்ட பணி உத்தரவின்படி திரு.N.ரவிச்சந்திரன், ஒப்பந்தகாரருக்கு பணி உத்தரவு
</td>
<td>அனுமதிக்கப்பட்ட<br>து</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டு, பணி துவங்கும் நிலையில் பணி மேற்கொள்ள ஆயத்தமாகும் நிலையில் அப்பகுதியிலுள்ள மக்கள் பணியை மேற்கொள்ள விடாமல் ஆட்சேபனை தெரிவித்து, இரண்டு புறமும் மழைநீர் வடிகால் அமைத்தால் மட்டுமே பணி மேற்கொள்ளலாம் என பல்வேறு தடங்கல்கள் செய்து வருகின்றனர். பலமுறை பணி மேற்கொள்ள ஆரம்பித்து, பணியை செய்ய விடாமல் தடுத்து விடுகின்றனர்.<br>மேற்படி பணி 15வது நிதிக்குழு திட்டப்பணியாக உள்ளதால், இத்திட்டத்தின் அவசர அவசியம் கருதி, மேற்கண்ட இடத்திற்கு (நடுக்கருப்பழகு தெரு) பதிலாக மாற்றுப் பணியாக கற்பகவீதி தெற்கு தெருவில் சாலையை புதுப்பிக்கும் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.616/2023/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 381 | **பொருள்.24**<br>புளியங்குடி நகராட்சி பகுதிகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021-2022 -ன் கீழ் இந்நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பேவர்பிளாக் சாலைகளை ஆய்வு செய்து மூன்றாம் தரப்பு மூலம் ஆய்வு செய்து சான்றிதழ் பெற்று வழங்க முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்களுக்கு 26.09.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி ஆய்விற்கான தொகை ரூ.44840/- வழங்க கேட்டு முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அலுவலகம் மூலம் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. அதற்கிணங்க தொகை ரூ.44,840/-யை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2744/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 382 | **பொருள்.25**<br>புளியங்குடி நகராட்சி வார்டு எண்.19, கெங்கையம்மன் கோவில் தெரு, கதவு எண்.96 இலக்கமிட்ட கட்டிடம் மற்றும் வார்டு எண்.17, ரோடு எண்.11, கதவு எண்.25, 26, 27, 27A, 27B, 27C இலக்கமிட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக திருமதி.P.தௌலத்மீரா என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P(MD)No.24377, 24378/2022-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கின் தீர்ப்பினை அமுல்படுத்த கோரி தொடரப்பட்ட வழக்கு | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | எண்.Cont.P(MD)No.574, 575/2023–ற்கு புளியங்குடி நகராட்சி ஆணையாளர் சார்பாக திரு.M.ராஜராஜன், வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு நடத்தியமைக்கும், வழக்குகளுக்கான வழக்கு கட்டணம் ரூ.20,000/– வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.260/2019/அ1)<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 383 | **பொருள்.26**<br>புளியங்குடி நகராட்சி, வார்டு எண்.25, பாலவிநாயகர் கோவில் தெருவில் வேப்பிலை மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. மேற்படி கோவில் வழிபாட்டு ஸ்தலமாக இருப்பதால் மின்இணைப்பு பெறுவதற்கு 25வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் வரியில்லா சான்று வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார். எனவே மேற்படி வழிபாட்டு ஸ்தலத்திற்கு வரியில்லா சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.2115/2023/அ1) | அனுமதிக்கப்பட்டது |

நகர்மன்றத்தலைவர்,

புளியங்குடி நகராட்சி.